ப

# மகளிர் சுய உதவிக்குழு மேற்கொள்ளும்

# சிறுதானிய சான்று விதை உற்பத்திக்கான

# வழிகாட்டுதல்கள்

## பொருளடக்கம்



| வ.எண் | விபரம் | பக்க எண் |
|---|---|---|
| 1 | விதை தேர்வு | 3 |
| 2 | விதைச்சான்று நடை முறை | 5 |
| 3 | விதை சுத்திகரிப்பு பணி: | 7 |
| 4 | விதைச் சான்று கட்டணங்கள் | 9 |
| 5 | விதை உற்பத்தியாளர் குழு அமைப்பு | 10 |
| 6 | விதைப் பண்ணை அமைத்து பதிவு செய்வதற்கான படிநிலைகள் | 13 |

## பகுதி — 1

## விதை தேர்வு

சிறுதானியங்களில் நிறைய புரதம் மற்றும் தேவையான அமினோ அமிலங்கள் நிறைந்துள்ளன. எனவே, அவை ஊட்டச்சத்து நிறைந்தவை ஆகும். 2023 ஆம் ஆண்டு உலக சிறுதானிய வருடமாக கருதப்படுவதால் சிறுதானிய சாகுபடிக்கு அனைத்து நாடுகளும் முக்கியத்துவம் அளித்து வருகின்றன. தமிழகத்தில் மானாவாரி மற்றும் பாசனத்தில் சிறுதானியங்கள் பயிரிடப்படுகின்றன . மேலும் இவை வறட்சியை தாங்கி பூச்சிகள் மற்றும் நோய்களை எதிர்த்து வளரும் தன்மை உடையவை.

இத்தகைய சிறப்புகளைக் கொண்ட சிறுதானியப் பயிர்களின் தரமான விதைகளை விவசாயிகளுக்கு தங்குத் தடையில்லாமல் கிடைப்பதை உறுதிசெய்வது இன்றியமையாதது ஆகும். 2021-22 ஆம் ஆண்டில் 100 சான்று விதை உற்பத்தி அலகுகளில் சுய உதவிக்குழு மகளிர் விவசாயிகள் ஆர்வமாக ஈடுப்பட்டு சான்றளிக்கப்பட்ட விதைகளை உற்பத்தி செய்து நிறைவான வருமானம் ஈட்டியுள்ளதால், இந்த 2023-24 ஆம் ஆண்டில் 100 சிறுதானிய சான்று விதை உற்பத்தி அலகுகளை சுய உதவிக்குழு மகளிர் விவசாயிகளின் ஈடுப்பாட்டுடன் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**தரமான விதை**:-

வேளாண்மையில் பயிரின் விளைச்சலுக்கு தரமான விதையே மூலதனம். தரமான விதை என்பது பாரம்பரிய குணங்களில் சிறிதும் குறையாமல், பிற ரகம் மற்றும் பிற பயிர்கள் கலப்பு இல்லாமல் தூசி தும்பு இல்லாமல் பூச்சி பூஞ்சானம் தாக்காமல் அதிக முளைப்பு திறன்இருக்கும் விதையே தரமான விதை ஆகும்.

தரமான விதைகள் என்றால் விதைச்சான்று பெற்ற விதைகளாக இருக்க வேண்டும். அவ்வகை விதைகள்..

1. அதிகப்படியான முளைப்புத் திறன்
2. சரியான பயிர் எண்ணிக்கை
3. சீரான பயிர் வளிர்ச்சி
4. ஒரே நேரத்தில் பூத்து முதிரும் பயிர் ஒரே நேரத்தில் அறுவடை, அதிக மகசூல் தருபவை

## பல்வேறு விதை நிலைகள்

**சான்று நிலை விதை வகைகள்**

1. வல்லுநிர் விதை (Breeder Seed) பொன்னிற அட்டை.
2. ஆதார நிலை ஒன்று (Foundation seed stage one) வெள்ளை நிற அட்டை
3. ஆதார நிலை இரண்டு (Foundation seed stage two) வெள்ளை நிற அட்டை
4. சான்று நிலை ஒன்று (Certified) நீல நிற அட்டை

எந்த நிலை விதைகள் யாரால் உற்பத்தி செய்யப்படுகிறது.

**1. வல்லுநர் விதை**

இவ்வகை விதைகள் வேளாண்மை விஞ்ஞானிகளால் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களிலும், அரசு விதைப் பண்ணைகளிலும் நேரடி மேற்பார்வையில் உற்பத்தி செய்யப்படுகிறது.

**2. ஆரா நிலை விதை**

வல்லுநர் விதைகளை விதைத்து ஆதாரநிலை விதைகளாக அரசு விதைப்பண்ணைகளிலும், விவசாயிகளின் வயல்களில் வேளாண்மை விதை மேற்பார்வையில் விதைப்பண்ணையாக அமைத்து, விதைச்சான்று துறை அலுவலர்களால் பல்வேறு நிலைகளில் ஆய்வு செய்து தகுதியான விதைகளுக்கு சான்றளிப்பார்கள். இவ்விதைகளுக்கு வெள்ளை நிற சான்றட்டை பொருத்தப்படும்.

**3. சான்று நிலை விதை**

ஆதார நிலை விதைகளை விதைப்பு செய்து சான்று நிலை விதைகளாக வேளாண்மை துறை அலுவலர்கள் மூலம், அரசு விதைப்பண்ணைகளிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளின் வயலில் விதைப்பண்ணையாக அமைத்து, விதைச்சான்று அலுவலர்களால் பல்வேறு நிலைகளில் ஆய்வு செய்து பெறப்படும் தகுதி வாய்ந்த விதைகளுக்கு சான்றளிப்பு செய்வார்கள். இவ்வகை விதைகளுக்கு நீல நிற சான்றட்டையில் சான்று வழங்கப்படும்.

**4. விபர அட்டை விதை**

இந்த விதைகள் தனியாரால் உற்பத்தி செய்யப்படுபவை. விதைச்சான்று துறை அலுவலர்கள் ஆய்வு செய்யமாட்டார்கள்

# பகுதி - 2

## விதைச்சான்று நடை முறை

பயிர் விதைகளை விதைப்பு செய்த 35 நாட்களுக்கு அல்லது பூப்பதற்கு 15 நாட்கள் முன்னதாகவோ தங்கள் பகுதி விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் விதைப்பு அறிக்கை (Sowing Report) 3 நகல்களில் உரிய படிவத்தில் பதிவு செய்யப்படவேண்டும்.

விதைப்பு அறிக்கை படிவத்தின் பின்புறம் வயலின் வரைபடம் இருக்க வேண்டும். இத்துடன் விதைகளுக்கான சான்றட்டைகள் விதை வாங்கிய விற்பனை ரசீது இணைக்கப்படவேண்டும. ஒரு விதைப்பு அறிக்கையில் அதிகபட்சமாக 25 ஏக்கர் வரை பதிவு செய்யலாம். விதைப்பண்ணையின் இருவேறு பகுதிகள் 50 மீட்டருக்கு மேல் இருந்தாலோ, விதைப்பு நாள் 7 நாட்களுக்கு மேல் வித்தியாசப்பட்டாலோ, தனித்தனி விதைப்பு அறிக்கைகளில் பதிவு செய்யவேண்டும்..

**விதைப்பு அறிக்கை - (Sowing Report)**

1. விதைக்குரிய சான்றட்டை (ஆதாரம் (அ) சான்று
2. விதை வாங்கிய பில் (அதில் சான்றட்டை எண்கள் குறிக்கப்பட வேண்டும்)
3. நிலத்தின் வரைபடம்
4. பதிவு கட்டணம் (பயிர் வாரியாக)

(உ.ம்) 1 ஏக்கர் *சிறுதானிய* விதைப்பண்ணைக்கு

| | | |
|---|---|---|
| பதிவுக்கட்டணம் | - | ரூ. 25 |
| வயலாய்வுக்கட்டணம் | - | ரூ.100 |
| விதைப்பரிசோதனை கட்டணம் | - | ரூ. 80 |
| மொத்தம் | - | ரூ.205 |

**வயலாய்வு (Field Inspection)**

விதைச்சான்று அலுவலர் முதல் ஆய்வில் (பூக்கும் தருணத்தில்) விதை ஆதாரம், சான்றட்டை, விதை வாங்கிய விபரம், பரப்பளவு போன்ற விபரங்களை ஆய்வு செய்வார். தவறாக இருந்தால் தள்ளுபடி செய்வார்.

விதைப்பண்ணை வயலில் பயிர் விலகு தூரம் உள்ளதா, கலவன்கள், மறுக்கப்படும் களைச்செடிகள் நோய் தாக்கிய பயிர்கள் அதிகம் இருந்தால் அவ்வயலை தள்ளுபடி செய்து விடுவார்கள்.

சான்று நிலை பயிர்களுக்கு மட்டும் ஊடு பயிர் அனுமதிப்பார். உற்பத்தியாளர் அல்லது பிரதிநிதி வயலாய்வின் போது உடனிருக்க வேண்டும்.

அனைத்தும் தேறிய நிலையில் விதைச் சான்று அலுவலர் இறுதி ஆய்வில் மகசூல் கனிப்பு மேற்கொண்ட பிறகு அறுவடைக்கு அனுமதிப்பார்.

**விதைப்பண்ணை தள்ளுபடி செய்தல்: (LFR Liable for Rejection)**

விதைச்சான்று அலுவலர், வயலாய்வு செய்த போது வயலில் பயிர் இல்லாமல் இருந்தால், மழை வெள்ளத்தால் பயிர் சாய்ந்து எழுந்திருக்க முடியாத நிலையில், வெள்ளம் வறட்சியால் பாதிக்கப்பட்டால், பிற ரக கலப்பு அதிகமாக இருந்தால், விதைப்பு அறிக்கைபடி வயல் மாறி இருந்தால் அவ்விதைப் பண்ணை வயல் தள்ளுபடி செய்து விடுவார்.

**சுத்தி அறிக்கை பெறுதல்;- (Processing Report Requested )**

அறுவடை செய்த விதைகளை முதல் 3 தினங்கள் நன்கு காய்ச்சல் போட வேண்டும். சிமெண்ட் தரையில் போடக்கூடாது தூசி, தும்பு, பதர் விதைகள், வைக்கோல், துண்டுகள் இல்லாதவாறு நன்கு தூற்றி சுத்தமான விதைகளாக்க வேண்டும். உரிய படிவத்தில் சுத்தி அறிக்கை கோரி விதைச் சான்று அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இறுதி வயலாய்விலிருந்து 3 மாதங்களுக்குள் வயல்மட்ட விதைகள் விதை சுத்திகரிப்பு நிலையத்திற்குள் வரவேண்டும்.

விதைச்சான்று அலுவலர் வயல்மட்ட விதைகளை விதைகள் சுத்தமாக உள்ளதா. கலவன்கள் உள்ளதா என ஆய்வு செய்து திருப்தியாக இருந்தால் மட்டுமே விதை சுத்தி அறிக்கை வழங்குவார். அதன்பின் புதிய கோணிப்பைகளில் அடைத்து விதைகளை சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படும்.

# பகுதி - 3

## விதை சுத்திகரிப்பு பணி: (Seed Processing)

வயல்மட்ட விதைகள் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வந்து 3 மாங்களுக்குள் சுத்திகரிப்பு பணி முடிக்கப்பட்டு விதை மாதிரிகள் எடுத்து விதை ஆய்வு கூட்டத்திற்கு அனுப்பப்படும்.

வேவேறு சிறுதானியங்களுக்கு குறிப்பாக கேழ்வரகு, கம்பு, சோளம் ஆகியவற்றுக்கு விதை மாதிரி எடுக்க வேண்டிய அளவு, நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச மூலைப்பு திறன் போன்றவை கீழே குறிப்பிட்டுள்ளது. மற்ற சிறுதானியங்களுக்கு இந்த விபரங்கள் இன்னும் நிர்ணயிக்கப்பட வில்லை..

**விதை ஆய்வு முடிவுகள்: (Seed Testing Report)**

| வ.எண் | பயிர்நிலை | மாதிரி அளவு | முளைப்பு திறன் % | ஈரப்பதம் % | புறரக கலப்பு | சான்று |
|---|---|---|---|---|---|---|
| 1.<br>2.<br>3. | சோளம்,<br>ராகி,<br>கம்பு | 900<br>130<br>150 | 75<br>75<br>75 | 12<br>12<br>12 | 10 | 20 |
| 4. | *தினை* | | | | | |
| 5. | *வரகு* | | | | | |
| 6. | *சாமை* | | | | | |
| 7 | *பனிவரகு* | | | | | |
| 8 | *குதிரைவாலி* | | | | | |

விதை ஆய்வு முடிவின்படி விதைக்குவியல் விதைகள் முளைப்பு திறன் புறத்தூய்மை, ஈரப்பதம் பிறரக கலப்பு இவைகளில் தேறாத விதைகள் தள்ளுபடி செய்யப்படும்.

**மறுமாதிரி எடுத்தல் (Resampling)**

பகுப்பாய்வில் தேறாத விதை குவியல்களை பகுப்பாய்வு முடிவு பெறப்பட்ட 15 நாட்களுக்குள் உற்பத்தியாளர் மறுமாதிரி எடுக்க சம்மந்தப்பட்ட விதை சான்று உதவி இயக்குநக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

பின்னர் மறு சுத்திகரிப்பு செய்த பகுப்பாய்வுக்கு மாதிரி அனுப்பப்பட்டு பரிசோதிக்கப்படும். தவறினால் தள்ளுபடி செய்யப்படும். பிறரக கலவன் மற்றும் இன தூய்மையில் தேறாவிடில் மறுமாதிரி அனுமதிக்கப்படமாட்டாது.

**<u>சான்றட்டை பொருந்துதல் (Tagging)</u>**

பகுப்பாய்வில் தேறிய விதைக்குவியல் விதைகளை பகுப்பாய்வு நாளில் இருந்து இரண்டு மாதத்திற்குள் அல்லது இனத்தூய்மை பரிசோதனை நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் சான்றட்டை பொருந்த வேண்டும். விதையின் காலாவதி நாள் விதை பரிசோதனை நாளிலிருந்து 9 மாதங்கள் ஆகும்.

நீலநிறச் சான்றட்டைகள் 50க்கு மேல் இருந்தால் வெள்ளை நிறசான்றட்டை ஒன்று இருந்தாலும் கண்டிப்பாக விபரங்களை அச்சிட்டு பொருத்த வேண்டும்.

உரிய காலத்திற்குள் சான்றட்டை பொருத்த இயலாத நிலையில் தாமத கட்டணம் ரூ.100, விதை பரிசோதனை கட்டணம் ரூ.80ம் செலுத்தி, விதை சான்று மற்றும் அங்கக சான்று உதவி இயக்குநர் அவர்களிடம் அனுப்பி தேறினால் மட்டுமே சான்றட்டை பொருத்த முடியும்.

**நிலை இறக்கம் (Down Grading)**

விதை பரிசோதனையில் பிற ரசக்கலவன் மற்றும் இனத்தூய்மையில் ஆதார நிலைக்கு தேறாமல் சான்று நிலைக்கு தேறியிருந்தால் விதைச்சான்று உதவி இயக்குநர் அனுமதி பெற்று சான்று நிலை விதையாக சான்று பணி தொடரலாம்.

**<u>திறனாய்வு (Revalidation)</u>**

விதை குவியலின் காலக்கெடு முடியும் தருவாய்க்கு முன்னர் விதையின் காலக்கெடுவினை மேலும் 6 மாதம் நீட்டிக்க மறு திறனாய்விற்கு விதை உற்பத்தியாளர் அல்லது விதை இருப்பு வைத்துள்ளவர். சம்பந்தப்பட்ட விதைச்சான்று உதவி இயக்குநருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

வேறு மாநிலத்திலிருந்து பெறப்பட்ட விதைகளுக்கு விதைச்சான்று இயக்குநர் கோவை அவர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
திறனாய்வு பணிக்கு அனுமதி வழங்கிய 15 தினங்களுக்குள் மாதிரி எடுத்து அனுப்பப்படும்.

வல்லுநர் விதைக்கு 13 மாதங்கள் வரை காலக்கெடு உண்டு. மீண்டும் மாதிரி அனுப்பி காலக்கெடு முதல் விதைப்பரிசோதனை நாளிலிருந்து 21 மாதங்கள் வரை அனுமதிக்கப்படும்.

## பகுதி - 4

## விதைச் சான்று கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| பதிவுக்கட்டணம் 1 விதைப்பு அறிக்கைக்கு | - | ரூ.25.00 |
| வயலாய்பு கட்டணம் ஏக்கருக்கு் சிறுதானியம் | - | ரூ.100.00 |
| விதை பரிசோதனை கட்டணம் | - | ரூ.80.00 |
| தாமத கட்டணம் கொள்முதல், சுத்தி பணிக்கு | - | ரூ.100.00 |
| வெள்ளை சான்றட்டை விலை | - | ரூ.5.00 |
| நீல நிறச்சான்றட்டை விலை | - | ரூ.4.00 |
| புதிய விதை சுத்தி நிலையம் | - | ரூ. 4000 |
| உரிமம் புதுப்பித்தல் | - | ரூ.2000 |
| விதை விற்பனை உரிமம் கட்டணம் | - | ரூ.1000 |
| உரிமம் புதுப்பித்தல் | - | ரூ.500 |

## பகுதி - 5

## விதை உற்பத்தியாளர் குழு அமைப்பு

- ஒரு விதை உற்பத்தியாளர் குழுவில் 5 முதல் 10 வரையிலான் சிறு, குறு பெண் விவசாயிகள் இருத்தல் வேண்டும்.
- இவர்கள் மகளிர் சுயஉதவிக் குழுவில் உறுப்பினராக இருத்தல் அவசியம்.
- அதே பகுதியைச் சார்ந்தவராகவோ அல்லது அதே வட்டாரத்தைச் சார்ந்தவராகவோ இருக்க வேண்டும்.
- விதை உற்பத்தியாளர் குழுவுக்கென்று தனி வங்கி கணக்கு தேவையில்லை.
- ஒவ்வொரு விதை உற்பத்தியாளர் குழுவுக்கும் ரூ. 2 இலட்சம் சூழல் நிதியாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்து வழங்கப்படும்.

## நிதி ஒதுக்கீட்டு விபரம்

- ஒவ்வொரு விதை உற்பத்தியாளர் குழுவுக்கும் திட்ட நிதி ரூ.2,00,000 சுழல்நிதியாக வழங்கப்படும்..
- திட்ட நிதியானது சம்பந்தப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு வழியாக விதை உற்பத்தியாளர் குழுவிற்கு வழங்கப்படும்.

ஒரு விதை உற்பத்தி அலகுக்கு (5-6 ஏக்கர் விதை பயிர் சாகுபடிக்கு) வழங்கப்படும் ரூ.2 இலட்சத்திற்கான பயன் படுத்தவேண்டிய விபரம்

| | |
|---|---|
| • விதைகள் மற்றும் உள்ளீடுகளின் விலை | ரூ. 30,000/- |
| • சாகுபடி செலவு | ரூ. 80,000/- |
| • அறுவடை & அறுவடைக்குப் பின் கையாளும் செலவு | ரூ. 60,,000/- |
| • போக்குவரத்து, ஏற்றுதல் & இறக்குதல் கட்டணம் | ரூ. 20,,000/- |
| • விதை சான்றளிப்பு தரநிலை இணக்கம் | ரூ. 10,,000/- |
| **மொத்தம்** | **ரூ. 200,,000/-** |

### பயனாளிகளை தேர்வு செய்தல் மற்றும் நிதி ஆதரவு

தமிழநாட்டில் சிறுதானியங்கள் அதிகம் பயிரடப்படும் மாவட்டங்களான தர்மபுரி, ,சேலம் ,நாமக்கல் ,மதுரை ,கிருஷ்ணகிரி ,கரூர் ,திண்டுக்கல்தூதுகுடி ,திருவண்ணாமலை , விருதுநகர் ஆகிய மாவட்டங்க ,விழுப்புரம் ,திருச்சிள் மற்றும் சிறுதானியம் சாகுபடிக்கு

வாய்ப்புள்ள மற்ற மாவட்டங்களிலிருந்து சிறுதானிய விதை உற்பத்தியில் ஆர்வமுள்ள 5-10 மகளிர் விவசாயிகளை தேர்வு செய்து ஒரு சிறுதானிய விதை உற்பத்தி குழுவாக அமைக்கப்படுவார்கள். ஒரு சிறுதானிய விதை உற்பத்தி குழுவிற்கு ரூபாய் 2 இலட்சம் சுழல் நிதியாக தமிழ் நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திலிருந்து வழங்கப்படும் .

இத்தகைய சிறுதானிய விதை உற்பத்தி குழுக்கள் கீழே குறிப்பித்துள்ளவாறு வெவ்வேறு மாவட்டங்களில் மூன்று சிறுதானிய பயிர் பட்டங்களில் 2023-24 ஆம் ஆண்டில் பயிரட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது

| வ. எண் | மாவட்டம் | பயிரிடும் பருவம் | | |
|---|---|---|---|---|
| | | கோடை பட்டம் | ஆடி பட்டம் | மார்கழி பட்டம் |
| 1 | கோவை | | 1 | |
| 2 | தர்மபுரி | 8 | | |
| 3 | திண்டுக்கல் | 4 | 4 | |
| 4 | ஈரோடு | | | 1 |
| 5 | கரூர் | | 4 | 1 |
| 6 | கிரிஷ்ணகிரி | 8 | | |
| 7 | மதுரை | 4 | 4 | |
| 8 | நாமாக்கள் | | 8 | |
| 9 | சேலம் | | 8 | |
| 10 | திருவண்ணாமலை | 10 | | 5 |
| 11 | தூத்துக்குடி | | 4 | 4 |
| 12 | திருச்சி | 2 | 2 | 4 |
| 13 | வேலூர் | | | 2 |
| 14 | விழுப்புரம் | 2 | 2 | 1 |
| 15 | விருதுநகர் | 2 | 2 | 3 |
| மொத்தம் | | **40** | **39** | **21** |

## பகுதி - 6

### விதைப் பண்ணை அமைத்து பதிவு செய்வதற்கான படிநிலைகள்

1. பதிவு செய்யப்படும் பெண் விவசாயிகளின் நிலம் நீர்ப்பாசன வசதியுடன் இருக்க வேண்டும்

↓

2. விதைப் பண்ணை உற்பத்தி குழுவிலுள்ள உறுப்பினர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் அட்மா திட்டத்தில் (AGRI's NET ல) பதிவு செய்து விவசாயிக்கான அடையாள எண் (ID No.) பெற வேண்டும்.

↓

3. விதைப் பண்ணை உருவாக்க ஆதார விதை (Foundation Seed) வேளாண் துறை பரிந்துரையின்படி வேளாண்துறையிலிருந்து பெற வேண்டும்.

↓

4. ஆதார விதைக்கான தொகையை வேளாண் விரிவாக்க மையத்தில் (Agri Seed Officer) வேளாண் விதை அலுவலரிடம் செலுத்தி பட்டியல் (Bills & Tag ) படி விதைகளைப் பெற வேண்டும்.

↓

5. ஆதார விதைகளைப் பெற்ற பின் சான்று அட்டையில் குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட தேதிக்குள் (காலாவதியாகாமல்) விதைப்பு செய்ய வேண்டும்.

↓

6. விதை விதைப்பு செய்த 35 நாட்களுக்குள் (பயிர்களுக்கு ஏற்ப உரிய நாட்களுக்குள்) விதைப்பு அறிக்கை பெற வேண்டும். விதைப்பு அறிக்கை அந்த வட்டார வேளாண் துறை அலுவலகத்தில் www.seedcertification.tn.gov.in என்ற இணையதளத்தில் வேளாண் அலுவலரால் பதிவு செய்யப்படும்.

↓

7. இணையதளத்தில் பதிவு செய்தவுடன் விவசாயிக்கு இணைய தள பதிவு அறிக்கை கிடைக்கும். இந்தப் பதிவு அறிக்கையுடன் கீழ்க்கண்ட விவரங்கள் இணைத்து விதைச் சான்று அலுவலரிடம் (SCO- Seed Certificication Officer) சமர்ப்பிக்க வேண்டும்.

   - விதைப்பு அறிக்கை படிவம் - 3 நகல்கள்
   - விதை ஆதார அட்டை சான்று
   - சாகுபடியாளருக்கு விதை வழங்கியதற்கான விற்பனை ரசீது
   - பதிவு கட்டணம் (வயலாய்வு கட்டணம், பகுப்பாய்வு கட்டணம், விதை பரிசோதனை கட்டணம் உள்ளடக்கியது)
   - விதைப் பண்ணை வரைபடம்

↓

8. விதை சான்று அலுவலர் சரிபார்த்த பின் அறிக்கை எண் வழங்குவார்.

↓

9. அறிக்கை எண் பெற்ற விதைப் பண்ணை விவசாயிகளின் நிலத்தை வட்டார உதவி விதை அலுவலர் மற்றும் விதைச் சான்று அலுவலர் 4 கட்டங்களாக கள ஆய்வு செய்வார்கள்.

   - முதல் கட்ட கள ஆய்வு - வளர்ச்சிப்பருவம்
   - இரண்டாம் கட்ட கள ஆய்வு - பூக்கும் பருவம்
   - மூன்றாம் கட்ட கள ஆய்வு - காய்பிடிக்கும் பருவம்
   - நான்காம் கட்ட கள ஆய்வு - அறுவடைப் பருவம்

↓

10. விதைச் சான்று அலுவலர் நான்காம் கட்ட கள ஆய்வை அறுவடை நேரத்தில் மேற்கொள்ளப்பட்டு மகசூல் அறிக்கை (Yield Estimate) தயார் செய்து கள அறிக்கை (FR- Field Report) வழங்குவார்.

↓

11. அறுவடை செய்த விதைகளை 13% ஈரப்பதத்திற்குள் உள்ள நிலையில் காய வைத்து பதர் போன்ற கழிவுகளை நீக்க வேண்டும். கள அறிக்கை (FR- Field Report) பெற்ற 7 நாட்களுக்குள் வேளாண் அலுவலகத்தில் வழங்கிய ஒரே மாதிரி எடையுள்ள

சாக்குப் பையில் கட்டி, ஈயவில்லை பொருத்தி விவசாயி விதை சுத்திகரீபபு நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும்.

↓

12. ஒப்படைக்கப்பட்ட விதைகள் வேளாண் அலுவலரால் ஆய்வு செய்து பிரித்தெடுக்கும் பணி (Process seeds) மேற்கொள்ளப்படும்.

↓

13. விதை சுத்திகரிப்பு நிலையத்தில் சேர்க்கப்பட்ட (FR- Seeds) விதைகளுக்கு 80% பட்டியல் தொகை (Bill of Cost) உதவி இயக்குநர் மூலமாக விதைப் பண்ணை பெண் விவசாயிகளுக்கு வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

↓

14. இறுதியாக முளைப்பு திறன் ஆய்வு செய்யப்பட்டு தேர்ச்சி பெற்ற பின்பு எஞ்சிய 20% பட்டியல் தொகை பெண் விவசாயிகளுக்கு வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

மேற்கண்ட செயல்பாடுகள் விதை உற்பத்தியாளர் குழு மூலம் தொடர்ச்சியாக செயல்படுத்தப்படும்